Registered as a Newspaper

கம்பூட்டர் முறையில் வர்ண புகைப்படங்கள் பிரதி செய்யப்படுகிறது
*
ஆர்த்தி
ஜுவலலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/-

* தரமான வர்ண புகைப்பட பிரதிகள்
* துரித சேவை
* Post Card Size Rs. 5/-
*
ஆர்த்தி
ஜுவலலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 6 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 7 (19-03-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:104

## இந்தியா பெருங் கவலை!

# பாக் - இலங்கை இராணுவ உறவு அதிகரிக்கிறது

### இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பது கஷ்டமாம்

புதுடில்லி, மார்ச் 18

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் வளர்ந்து வரும் இராணுவ உறவு குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. அதே வேளை இலங்கை, வெளிநாட்டுப் பாதுகாப்பு, உளவு அமைப்புகள் சம்பந்தமாக மேற்கொண்டு வரும நடவடிக்கைகள் குறித்தும் இந்தியா கவலையும் விசனமும் வெளியிட்டுள்ளது

இந்திய வெளிநாட்டமைச்சின், அயல்நாடுகளுடனான உறவுகள் சம்பந்தமான 1985-86ஆம் ஆண்டுக்கான அறிக்கை இன்று இங்கு வெளியிடப்பட்டது.

பிரஸ்தாப அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இலங்கை, அந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதிலேயே தீவிர அக்கறையும் காட்டி வருகிறது. இது குறித்தும் இந்தியாவுக்கு பெரும் கவலையும் வேதனையும் ஏற்பட்டிருக்கிறது

இந்த நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படாவிட்டால் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது என்பது முடியாத - கஷ்டமான காரியமாகிவிடும்.

இலங்கையில் நாளாந்தம் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன தமிழர்கள் வகை தொகை இன்றிக் கொலை செய்யப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரியை அனுப்புமாறு ஜே. ஆர். மீண்டும் கோருகிறார்

கொழும்பு, மார்ச் 19

வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியை இலங்கைக்கு அனுப்புங்கள்.

இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுப்பிய வாய்மூல செய்தியில் இதுதான் முக்கியமாக இடம் பெற்றுள்ளது என்று கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

வேறு குறிப்பிடத்தக்க செய்தி எதுவும் அதில் இல்லை என்றும் கூறப்படுகிறது.

திரு. ரொமேஷ் பண்டாரி மார்ச் 31 உடன் ஓய்வு பெற இருக்கின்றார்.

## இந்தியாவில் தேசிய பாதுகாப்புச் சபை

### பார்த்தசாரதி தலைவர் ஆகலாம்

புதுடில்லி, மார்ச் 18

இந்திய அரசு, தேசிய பாதுகாப்புச் சபை ஒன்றைப் புதிதாக அமைக்க இருப்பதாகத் தெரியவருகிறது

இந்து மாகடல் பாதுகாப்பு உட்பட நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான சகல பொறுப்புகளும் அந்தச் சபையிடம் ஒப்படைக்கப்படும் என்று நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இச்சபையின் தலைவராக திரு ஜி. பார்த்தசாரதி நியமிக்கப்படக் கூடும் என்று புதுடில்லி அரசு வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

மார்ச் 31 இல் திரு. ரொமேஷ் பண்டாரி வெளியுறவுச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

அவரின் இடத்தை திரு.ஏ. பி. வெங்கடேஸ்வரன் நிரப்புவார்.

திரு பண்டாரிக்கு பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட தூதர் அந்தஸ்து வழங்கப்படும் என்று தெரிகிறது

ஏப்ரல் முற்பகுதியில் இம்மாற்றங்கள் இடம் பெறும்

தேசிய பாதுகாப்புச் சபை அமைக்கப்படுவதும் அப்பொழுதே அறிவிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.

## நயினை அம்பாளுக்கு பூசை, ஆராதனை

### 108 நாள் பாராயணம்

சுண்டுக்குளி, மார்ச் 19

அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களால் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இரு வாரங்களாக தடைப்பட்டிருந்த நித்திய பூசைகள் பிராயச்சித்தாதிகள் செய்யப் பெற்று அபிஷேக ஆராதனைகளுடன் கடந்த 17 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகின.

அம்பிகைக்கு சந்தனத்தால் அபிஷேகம் நடைபெற்றபோது அங்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் கண்ணீர் மல்க அம்பாளைத் தரிசித்தனர்.

உச்சிக் கால பூசை முடிவுற்றதும் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. த. குலசேகரம் 'அபிராமி அந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



கப்பல்களிலே வாற சரக்குகள், உள்நாட்டுப் பாதுகாப்புக்கோ அல்லது வெளிநாடுகளைத் தாக்குப் பிடிக்கவோ எண்டு எனக்கு ஒரு சமிசம்!

## 2 வது நாளாக நேற்று மறியல்

நல்லூர், மார்ச் 19

நேற்று இரண்டாவது நாளாக மக்கள் வங்கி வட பிராந்திய அலுவலகம் உட்பட சகல மக்கள் வங்கிக் கிளைகள் முன் மறியல் போராட்டம் நடந்தது.

ஊழியர்கள் வேலைக்கு வந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

பூட்டுக்கள் திறக்கப் படவில்லை.

நேற்றைய மறியல் போராட்டத்தில் பெரும்பாலும் பெண்களே கலந்து கொண்டனர்.

சுபநேரம்
19- 3- 1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.49 முதல் 6 19 வரை
ராகுகாலம்:
12·19 முதல் 1.49 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி
மு. 9. 21 வரை

## பிரிட்டிஷ் குழு இலங்கை வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை இனப்பிரச்சினைபற்றி நேரில் ஆராய பிரிட்டிஷ் நீதி அமைச்சில் பணியாற்றிய உயர் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த வாரம் கொழும்பு வர உள்ளது.

குழுவில் 5 பேர் இருப்பர். அவர்களில் 2 பேர் முன்னாள் பிரதம நீதியரசர்கள்.

நான்கு நாட்கள் இலங்கையில் தங்கி நிற்கும் போது ஜனாதிபதி, அமைச்சர் அத்துலத் முதலி, பிரதம நீதியரசர் ஆகியோரை இக்குழு உறுப்பினர்கள் சந்திப்பர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று பார்வையிட இக்குழு இலங்கை அரசின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

தடுப்பு முகாம்களுக்குச் சென்று தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடவும் பிரிட்டிஷ்குழு, அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளது.

## ★தாதிகள் வேலை நிறுத்தம்

கொழும்பு,மார்ச் 19

தாதிகள் நேற்று நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தாதிகள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 7,000 தாதிகள் வேலை நிறுத்தஞ் செய்தனர்.

இதனால் கொழும்பு, கண்டி, காலி, பதுளை போன்ற இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் பாதிக்கப்பட்டன.

மாதம் 700 ரூபா அலவன்ஸ், யூனிபோம் அலவன்ஸ் 200 ரூபா ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே தாதிகள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

# வட பகுதி வந்த 2 கப்பல்கள்!

## 'பொருள்கள்' காரைநகர் முகாமுக்கு விரையப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 19

இரண்டு கப்பல்கள் நேற்று அதிகாலை வடபகுதிக் கடல் பிரதேசத்திற்குள் வந்து சேர்ந்தன!

இரண்டு ஆயுதப்படை முகாம்களுக்கு நடுவில் கடற்பகுதியில் இரண்டு கப்பல்களும் நிற்கின்றன.

இரண்டு கப்பல்களைச் சுற்றியும் பீரங்கிப் படகுகள் பலத்த காவல் புரிகின்றன.

கப்பலில் இருந்து பல பெட்டிகள் பாதுகாப்பாக இறக்கப்பட்டு பீரங்கிப் படகுகள் மூலம் காரைநகர் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டன என்று மிகவும் நம்பிக்கையாகத் தெரிகிறது.

பெட்டிகளை இறக்குபவர்களுக்கு கறுப்புநிற உடையணிந்தவர்கள் பாதுகாப்பு வழங்கினர் என்றும் தெரிய வந்தது

ஒரு கப்பல் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானது என்று நம்பப்படுகிறது

கப்பல் நின்ற கடல் பகுதியில் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன என்று அறியப்படுகின்றது.

## மூன்று நாட்களுக்கு பின்பு உயிருடன் மீட்பு

சிங்கப்பூர், மார்ச் 18

தரைமட்டமான ஹோட்டல் இடிபாடுகளுக்கு இடையில் இருந்து மூன்று நாட்களுக்குப்பின் உயிருடன் மூவர் மீட்கப்பட்ட அதிசயம் சிங்கப்பூரில் நிகழ்ந்தது.

கடந்த சனிக்கிழமை சிங்கப்பூரில் ஆறு மாடி ஹோட்டல் ஒன்று இடிந்து விழ்ந்தது தெரிந்ததே.

இடிபாடுகளுக்கிடையில் இருந்து இதுவரை 16 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். கடைசியாக நேற்று மூவர் மீட்கப்பட்டனர்.

நூறு பேருக்கு மேல் இடிபாடுகளுக்கிடையே சிக்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதுவரை 8 சடலங்கள் மட்டும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

### அரசாங்க அதிபரின் கடிதம் இருந்தால் போதும்:

# பூஸா, வெலிக்கடை, மகஸீன் சிறைகளில் உள்ளோரை பார்க்க வசதி

யாழ்ப்பாணம், மார்ச் 19

பூஸா, வெலிக்கடை, மகஸீன் ஆகிய சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப உறவை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரிடம் இருந்து கொண்டு சென்றால் தடுப்புக் காவலில் உள்ளவர்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தடுப்புக் காவலில் உள்ள ஒருவரை ஒரு தடவையில் இரண்டு பேர் சென்று பார்வையிடலாம்.

தடுப்புக் காவலில் உள்ளவருக்கும் பார்வையிடச் செல்பவருக்கும் இடையிலான உறவு முறையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றை சம்பந்தப்பட்ட அரச அதிபரிடம் பெற்றுச் சென்று பூஸா தடுப்பு முகாம் அதிகாரிக்கு அல்லது சிறைச்சாலை ஆணையாளருக்குக் கையளித்தல் வேண்டும்.

வெலிக்கடை, மகஸீன் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் உள்ளவர்களை செவ்வாய், சனிக்கிழமைகளில் காலை 9-30 மணி தொடக்கம் மாலை 5-30 மணி வரைக்கும் பார்வையிடலாம்.

பூஸா தடுப்பு முகாமில உள்ளவர்களை செவ்வாய், வியாழக்கிழமைகளில் காலை 9-30 மணி முதல் மாலை 5-30 மணி வரை பார்வையிடலாம்.

உறவு முறையை அத்தாட்சிப்படுத்தும் அரசாங்க அதிபரின் கடிதத்தை எப்படிப் பெறுவது?

இது பற்றிய விளக்கம் கீழே தரப்படுகிறது:

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவரின் உறவினர்கள் அத்தகைய

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்கள் வெளியே வர முயன்றபோது நாவற்குழியில் பதற்றம்

நல்லூர் மார்ச். 19

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து சிப்பாய்கள் வெளியே வர முயற்சித்தபோது போராளிகள் கைக்குண்டுளை வீசி அவர்களை வெளியேறவிடாது தடுத்தனர்.

நேற்றுக் காலை சுமார் 8 மணி அளவில் இச் சம்பவம் நடந்தது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நேற்றுக் காலை எட்டு மணி அளவில் 25க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் வயல்வெளிகள் ஊடாகவும் வீதிக்கரைகள் ஊடாகவும் கைதடி வீதிப்பக்கமாக வெளியேற முயற்சித்தனர்.

அப்பொழுது போராளிகள் இரண்டு கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இதனை அடுத்து சிப்பாய்கள் முகாமுக்குத் திருப்பிச் சென்றனர்.

இதனால் கைதடி — நாவற்குழி பகுதிகளில் பதற்றம் நிலவியது.

முகாம் வீதி வழியாகப் போக்குவரத்துச் செய்வோர் நேற்று கோப்பாய்—கைதடி வீதியைப் பயன்படுத்தினர்.

## சர்வானந்தா தலைவர்?

கொழும்பு, மார்ச் 19

அமைச்சர்கள், அரச எம்.பிக்கள், கூட்டுத்தாபன, பொதுத்துறை அதிகாரிகள் மீதான ஊழல்கள் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட உள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா தலைவராக நியமிக்கப்படலாம் என்று தெரிய வருகின்றது.

### கடல் உறங்குகிறது! ஒன்று திரளுங்கள்

## மீன்பிடித் தடையை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 19

மீன்பிடித் தடையை எதிர்த்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வடபகுதி கடற்றொழிலாளர் ஒன்றியத்தினால் இன்று (புதன்கிழமை) காலை யாழ் நகரில் நடத்தப்படுகிறது.

பேரணி இன்று காலை 10 மணிக்கு யாழ் புனித மரியாள் பேராலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய பகுதிக் கடற்றொழிலாளர்களின் பேரணிகள் அவ்வப் பகுதிகளில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி காலை 10 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் ஒன்றிணையும். வெளியூர் மீனவர்கள் காலை 10 மணிக்கு பேராலயத்தில் ஒன்றிணைந்து கொள்வார்கள்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இன்று மீன் விற்பனை முற்றாகத் தடைப்பட்டிருக்கும்.

மீன் விற்பனை செய்வோர் அனைவரும் பேரணியில் கலந்து கொள்வதே இதற்குக் காரணம்.

## பாக் கிரிக்கெட் வீரரை நோக்கி கல் வீச்சு!

கொழும்பு, மார்ச் 19

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரை நோக்கி கல் வீசப்பட்டது.

நேற்று கொழும்பு சிசிசி மைதானத்தில் நடந்த இலங்கை — பாகிஸ்தான் டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றியீட்டியது.

இதன் பின்னர் பாகிஸ்தான் வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த சமயம் அவர்களை நோக்கிக் கல் விசப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இசைக்குயில் ஜானகி பாடலும் இயற்றுகிறார்

இந்தியாவின் மிகச் சிறந்த பாடகிகளில் இசைக் குயில் ஜானகியும் ஒருவர் அவருடைய பாணி தனியானது.

சினிமா இசையின் தரம் குறைந்து விட்டது என்றும், சினிமாவிலுள் இசையின் தரம் குறைந்து விட்டது என்றும் சிலர் குறை கூறுவது பற்றி ஜானகி விளக்கினார்.

அவர் அது பற்றி குறிப்பிடுகையில்,

'சினிமா இசையின் தரம் குறையவே இல்லை. சினிமாவின் முதல் இசையமைப்பாளர் முதல் இளையராஜா வரை அற்புதமான இசைக் கோலம் போட்டு இசை மாளிகையைக் கட்டிக் காத்து வருகிறார்கள் என்பது தான் உண்மை.

தரமான கர்நாடக இசை என்னும் இசை அருவியில் இருந்து பெருக்கெடுத்து வரும் ஜீவநதிதான் சினிமா இசை.

சினிமாவில் மெல்லிசை மட்டும் அல்ல, ஆழமான எத்தனையோ இசை உருப்படிகளும் நாதமழை பொழிந்து. மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து வருகின்றன' என்று பெருமையோடு சொன்னார்.

மெய் வருத்தம் பாராமல், நேரா நேரத்துக்கு உணவு அருந்தக் கூட இயலாமல் பாடிக் கொண்டே இருக்கிறார் ஜானகி.

தென்னக மொழிகளில் மட்டும் அல்லாமல் இந்தியிலும் பல படங்களில் ஜானகி பாடிப் புகழ் பெற்று வருகிறார்.

இந்தியில் பாடுவதற்கு இன்னும் தொடர்ந்து பல அழைப்புகள் வந்து கொண்டே இருந்தாலும், நேரம் இல்லாமையால் ஒப்புக் கொள்ள முடியவில்லை என்கிறார் அவர்.

சினிமா இசையில் அனுபவம் உடையவர்கள் அதிகமாக இசையமைப்பாளராக மாறி விடுகிறார்கள். ஆனால் எனக்கு அதற்குஎங்கே நேரம் கிடைக்கிது என்று சொல்லும் அவர், அது பற்றியும் விளக்கினார்.

'பாடுவதற்கே நேரம் இல்லை இசையமைப்பைப் பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்ஆயினும் சூர்தாஸ், துலாசிதாஸ், மீரா, கபீர்தாஸ் ஆகுயோரின் பக்திப் பாடல்களுக்கு நானே இசையமைத்துப் பாடியுள்ளேன்.

பக்த மீராவின் பதினறு இந்திப் பாடல்களுக்கும் நானே இசையமைத்துப் பாடிய கஸட்டுகள் மிகவும் பிரபலமாகி உள்ளன.

இப்பொழுது பாடல் இயற்றியும் வருகிறேன். 'கண்ணு நீ எங்கே?' என்ற பாடல் நல்ல வரவேற்கப் பெற்றுள்ளது' என்கிறார்.

தினசரி சினிமா

# பாகிஸ்தானில் அமெரிக்க கப்பலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## 50 மாணவர்கள் கைது

கராச்சி, மார்ச் 18

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 50 மாணவர்களை பாகிஸ்தான் அரசு கைதுசெய்துள்ளது.

பிரமாண்ட விமானந் தாங்கியான அமெரிக்க கடற்படைக் கப்பல் 'என்டர்பிரைஸ்' கராச்சித் துறைமுகத்தை அடைந்துள்ளதை எதிர்த்தே பாகிஸ்தான் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் சமாதானத்துக்குச் சவாலாக இந்தக் கடற்படைக் கப்பல் கராச்சிக்கு வந்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பாகிஸ்தான் அரசெதிர்ப்பு இயக்கமான பாகிஸ்தான் மக்கள்கட்சி மாணவர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு எதிராகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

### செயில் சிங் கருத்து

விஜயவாடா, மார்ச் 18

உள்ளூராட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள், முனிசிப்பல் சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் அரசியற் கட்சிகள் போட்டியிடக் கூடா.

இந்திய ஜனாதிபதிதிரு. செயில்சிங் இக்கருத்தை விஜயவாடா மாநகர சபை அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு பேசுகையில் சொன்னார்.

இதற்கிடையே பாரதத்தில் பாட்னா நகரில் நடந்து முடிந்த அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 13வது மாநாட்டுத்தீர்மானத்திலும்;

இந்துசமுத்திரப் பிராந்தியத்தை இராணுவமயமாக்க அமெரிக்கா முயல்வதாகவும் திருகோணமலைத் துறைமுகத்தையும் தமது செல்வாக்குக்கு உட்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் விலை பெருமளவு வீழ்ச்சி ஏற்படும் ஆபத்து

ஜெனீவா, மார்ச். 18

எண்ணெய் உற்பத்தி நாடுகள் உற்பத்தியைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்காவிட்டால், மிகப்பாரதூரமான முறையில் எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்படும்.

இப்படி சவூதி அரேபியாவின் எண்ணெய்வள அமைச்சர் ஷேக் ஜமானி எச்சரித்துள்ளார்.

பிரிட்டன் நோர்வே ஆகிய நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க முன்வருவதாக இல்லை.

இவ்விருநாடுகளும் ஒத்துழைப்புத் தராவிடில் எண்ணெய் விலைவிழ்ச்சி எதிர்பாராத அளவுக்கு இருக்கும்.

ஒரு பீப்பாய்க்கு 8 டாலர் வீழ்ச்சி ஏற்படக் கூடிய அபாயம் உருவாகியுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## சவூதி அரேபியா எச்சரிக்கை

லண்டன், மார்ச், 18

குவைத் மீது மேற்கொள்ளப்படும் எந்தத் தாக்குதல்களும் சவூதி அரேபியாவுக்கெதிரானதாகக் கருதப்படும்.

இவ்வாறு சவூதி அரேபியாவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தொலைபேசி இருக்கவில்லை

புதுடில்லி, மார்ச் 18

கடந்த ஆண்டு நவம்பரில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற சூறாவளியின் போது தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரனின் வாசஸ்தலத்திற்கு தொலைபேசி வசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

1986 ஜனவரியில் தான் திரு இராமச்சந்திரனுக்குத் தொலைபேசி வசதி கொடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அண்ணா தி.மு.க. எம்.பி. திரு.பி. குழந்தைவேலு இதனை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சூறாவளியின் போது திரு இராமச்சந்திரன் உடன் தொடர்பு கொள்ள முயற்சித்ததாகவும், அவர் நித்திரையில் இருப்பதாகக் கூறப்பட்டதாகவும் திரு மா வானு என்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது தவறு என்றும் திரு குழந்தைவேலு சொன்னார்.

தமிழ்நாடு விவசாயத் துறை அமைச்சர் திரு. கே.காளிமுத்து இது சம்பந்தமாக விடுத்த அறிக்கையில், "மக்ரூவின் அறிக்கை கற்பனையானது" — என்று கூறியுள்ளார்.

## வெளி உலகில்

### சுவீடிஷ் பிரதமர் பால்மே கொலைச் சந்தேக நபர் கைது

#### மர்மம் துலங்கலாம் என பொலீஸார் நம்பிக்கை

ஸ்டொக்ஹோம், மார்ச் 18

சுவீடன் நாட்டுப் பிரதமர் ஒலோவ் பால்மேயின் கொலை தொடர்பாக பொலீஸார்; அங்கு ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சுவீடிஷ் பிரஜையான இந்த நபர் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

எவெஞ் செலிக்கன் திருச்சபையைச் சேர்ந்தவர் என இவர் சந்தேகிக்கப்படுகிறார். இவரின் சகாக்கள் எனக் கருதப்படுபவர்களையும் சுவீடிஷ் பொலீஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

பால்மே கொலை தொடர்பாக பல தகவல்கள் மேலும் அம்பலத்துக்கு வரலாம் என சுவீடிஷ் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

### அதிகாரக் குறைப்பு

ஏதென்ஸ், மார்ச் 18

கிரேக்கநாட்டில்ஜனாதிபதியின் முக்கிய அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

பிரதமரைப் பதவியில் இருந்து விலக்குவது, நாடாளுமன்றத்தைக் கலைப்பது ஆகியவை தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்களையே நாடாளுமன்றம் ரத்துச் செய்தது.

பிரதமர் திரு. அன்ரீஸ் பாப்ன்றூவின் சோஷலிசக்கட்சியே நாடாளுமன்றத்தில் இதுசம்பந்தமான சட்டமூலத்தைச் சமர்ப்பித்தது. புது ஜனநாயகக் கட்சி இச்சட்டமூலத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்தது

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# காசோலை தமிழில் வேண்டும் என்கிறது ஆசிரியர் சங்கம்

## சேவைகால பயிற்சி அலவன்ஸ்

### அதிகரிப்பு தேவை எனவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச். 19

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆசிரியருக்கு சம்பளம் காசோலை மூலம் வழங்கப்படுகிறது. அந்தக் காசோலையைத் தமிழில் எழுதி வழங்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

1 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு குறைந்தது 75ரூபா அலவன்ஸ் வழங்கப்படவேண்டும்.

2. தயாரத்ன கமிட்டியின் சிபார்சுக்கு அமைய ஒரு பகுதி ஆசிரியருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்ச்சியையாவது தராதரப் பத்திரமுள்ள, தராதரப் பத்திரமற்ற ஆசிரியருக்கும் வழங்க வேண்டும்.

3 30 4 80 இல் பதில் அதிபர்களாக இருந்தவர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். அச் சமயம் பல தமிழ்ப்பாடசாலை அதிபர்கள் புறக்கணிக்கப்பட்டனர். அவர்களையும் அதே திகதியில் இருந்து நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## செய்தியாளர் மரணம்

### ஏ. எஸ். பி. விசாரணை திங்கள் ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச் 18

ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வவுணதீவு வீரகேசரி செய்தியாளர் திரு. கே. எஸ். இரத்தினசிங்கம் மரணமான சம்பவம் பற்றிய விசாரணை திங்களன்று கல்லடி அதிரடிப் படைமுகாமில்நடைபெற்றது

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் உதவி பொலீஸ் அதிபர் டிக்ஸன் சில்வா விசாரணை நடத்தினார்.

திரு. இரத்தினசிங்கத்தின் மனைவி சிவகாமி (திலகா) இச்சம்பவத்தில் மரணமான தங்கவேலுவின் தந்தை மா.மாணிக்கம், இராசநாயகத்தின் தாய் செல்லம்மா ஆகியோரும்மரண விசாரணையில் சாட்சியம் அளித்தனர்.

செல்லம்மா சாட்சியமளிக்கையில். "இறந்த என் மகன் மீன்பிடித்துக் கொண்டிருந்தார். படையினர் சுட எத்தனித்த போது, சுடவேண்டாம் அவரைக் கூப்பிடுகின்றேன் என்று சொன்னேன் இருந்தும் மகன் சுடப்பட்டார்" —என்று சொன்னார்.

சிவகாமி சாட்சியமளிக்கையில், "செய்தி சேகரிக்க மாந்தீவு சென்ற என்கணவர் அன்று இரவு வீடு திரும்பவில்லை. மறு நாள்தான் அவர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டேன்" — என்று சொன்னார்.

சாட்சியங்களை மட்டக்களப்பு பிரஜைகள்குழுத் தலைவர் திரு. சாம் தம்பிமுத்து நெறிப்படுத்தினார்.

## முத்துமாரி அம்பாள் உத்தர விழா

கிளிநொச்சி, மார்ச், 19

கிளிநொச்சி உதய நகர் அருள் மிகு ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலயத்தில் பங்குனி உத்தர விழா எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

## ஆங்கிலம் உலகுக்கு நுழைவுச் சீட்டு

### அதன் அவசியம் குறித்து அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

"ஆங்கிலம் உலகுக்கான நுழைவுச் சீட்டு" என்பார்கள் ஆங்கில அறிவு உள்ளவர் உலகின் எப்பகுதிக்கும் சென்று ஆங்கிலத்தினூடாக அப்பகுதி மக்களோடு தொடர்பு கொண்டு தமது பணிகளை எளிதாக்க முடியும். முன்னர் ஆங்கிலம் இரண்டாம் மொழி எனக் குறிப்பிட்டிருந்தாலும் இப்போது அது பாடத்திட்டத்தில் சர்வதேச மொழி என தெரிவிக்கப் பட்டுள்ளது இப்பெயரீடு மாணவர் உள்ளத்தில் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்த்துவதாக அமைகிறது.

வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டிகளை ஆரம்பித்து வைத்த அதிபர் கா.கணேசதாசன் தமது ஆரம்ப உரையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஆங்கில ஆசிரியை திருமதி எல். செல்வரத்தினம் ஆகியோர் மாணவர்களை நெறிப்படுத்தி போட்டிகளுக்கு அனுப்பினார்கள்.

ஆங்கிலப் பேச்சு, வாசிப்பு, பாட்டு, எழுத்து, சொல்வது எழுதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலை ஆசிரியர் திரு. ம மாணிக்க வாசகர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை திருமதி கே. தனபாலசிங்கம் பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி ஜி.செல்லத்துரை ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

முதலிடம் பெற்ற மாணவர் வட்டாரப் போட்டியில் பங்கெடுப்பார்கள்.

## தோல்வியைக் கண்டு துவண்டு விடக் கூடாது

### சரஸ்வதி வித்தியாலயத்தில் உரை

அச்சுவேலி, மார்ச் 19

வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். தோல்வியைக் கண்டு துவண்டு விடாது நாளை வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ வேண்டும். இந்த உண்மையை விளையாட்டுப் போட்டிகள் நிலைநிறுத்திக் காட்டுகின்றன. இவ்வாறு கூறினார் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் திரு சி.ஆறுமுகம்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் இல்ல மெய் வல்லுநர் போட்டிகளில் பிரதம விருந்தினராக அவர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். பாடசாலை அதிபர் திரு. எஸ். விக்னேஸ்வரராசா தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சுந்தரர், அப்பர், சம்பந்தர் இல்லங்கள் 1ம் 2ம் 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

## மக்கள் முகம்

### ஆலயவழிபடுவோர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் 1986 ஆம் ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகள் தெரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் அனுசரணையுடன்தர்மகர்த்தாசபைத் தலைவர் திரு ச. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் 85 வீத அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் அ. நாகராஜா துணைத்தலைவர்கள் மு. இராமநாதன், பொ. பொன்னம்பலம், செயலாளர் எஸ் கே. உதயசூரியர், துணைச்செயலாளர்கள் க. கௌரிகாந்தன், எஸ். ஜீ. சண்முகநாதன், பொருளாளர் அ அழகேந்திரன், துணைப்பொருளாளர் ஏ. தெய்வேந்திரம்.

இருபத்து இரண்டு பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவாகினர்.

கூட்டம் முடிவில் தேர்தலை மிகவும் கட்டுப்பாடாகவும் நேர்மையாகவும் நடத்தித் தந்துதவிய எமது உதவி அரசாங்க அதிபருக்கும் அவரது உத்தியோகத்தர்களுக்கும் திரு. சி. சுப்பிரமணியம் நன்றி உரை கூறினார்.

## ரூ. 10 ஆயிரம் என்று கூட்டிச் செல்லப்பட்டு ரூ 3.500 சவூதியில் சம்பளம்

### ரூ 28 ஆயிரம் கட்டி இருந்தாராம்

யாழ்ப்பாணம், மார்ச். 19

வெளிநாட்டில் 10,000 ரூபா மாதச் சம்பளம் கிடைக்கும் என்ற ஆசை வார்த்தைக்குப் பலியாகி 28,000 ரூபா பணத்தை ஏஜன்ஸிக்கு கொடுத்து சென்றவருக்குகிடைத்ததோ 3,500 ரூபா சம்பளம் தான்.

இந்தக் கசப்பான அனுபவத்தைப் பெற்றவர் பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சி வாசியான திரு. சு. சத்தியசீலன்

'உதயன்' அலுவலகம் வந்து தமக்கு நேர்ந்த அனுபவத்தை திரு சத்தியசீலன் சொன்னார்.

அவர் சொன்னதாவது;

பத்தாயிரம் ரூபா சம்பளத்தில் சவூதி அரேபியாவில் போர்மனை வேலை என்று கூறி ஏஜன்ஸி ஒன்று என்னை 6 2. 86 இல் அனுப்பியது.

இதற்காக அந்த ஏஜன்ஸிக்கு நான் 28,000 ரூபா கூலியாகக் கொடுத்தேன்.

போர்மனை வேலை செய்தேன் ஆனால் மாதச் சம்பளமாக ரூபா 3,500 — தந்தார்கள். தொழில் தந்தவர்களிடம் விவரத்தைச் சொன்னேன்.

"உங்களை இங்கு அனுப்புவதற்காக இலவச டிக்கெட்டும் அதைவிட 10,000 ரூபாவும் ஏஜன்ஸிக்குக் கொடுக்கிறோம். பின்னர் ஏன் உங்களிடம் 28,000— ரூபாவை வாங்கினார்கள் — இப்படி தொழில் தந்தவர்கள் கேட்டார்கள்.

என்னைப் போன்று 28,000 ரூபாவை கட்டிச் சென்ற பலர், அங்கு மாதம் 2,300 ரூபா சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். வட்டியுடன் 28,000 ரூபாவை திருப்பிச் செலுத்த 16 மாதங்கள் வேலை செய்ய வேண்டும்.

மிகுதி எட்டு மாதங்கள் உழைத்து என்ன கண்டது? சவூதியில் இருந்து திரும்பிய பின்னர் மீண்டும் கடனாளி நிலைதான்.

ஏஜன்ஸிகள் தமிழ் மக்களின் வாழ்க்கையைக் கரியாக்குகின்றது.

இப்படி திரு. சத்தியசீலன் சொன்னார்.

## துணுக்காய் சம்பவம்: இடைக்காடு, கரவெட்டி பகுதியில்உறவினர்குழப்பநிலை

அச்சுவேலி. மார்ச் 19

துணுக்காய் பகுதியில் நடந்த சம்பவங்களால் இடைக்காடு கரவெட்டி அச்சுவேலிப் பகுதி மக்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர்.

கடந்த 10ஆம் 11ஆம் திகதிகளில் துணுக்காய்ப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் தங்கியிருந்து தாக்குதல் உள்ளடக்கிய தொடர்தேடுதல் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தில் 30 பேருக்குமேல் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டனர். ஏழுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் வெளிவந்தன.

வவுனிக்குளக் குடியேற்றத்திட்டப் பகுதியில் 6ஆம் யூனிற் உட்பட்ட துணுக்காய் பகுதியில் பலவீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சிலவீடுகள் கொள்ளையடிக்கப் பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றபகுதியில் இடைக்காடு, அச்சுவேலி, துன்னாலை, கரவெட்டிப் பகுதி மக்கள் பெருமளவு குடியேறி உள்ளனர்.

இடைக்காட்டுப் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டோர் கொலை செய்யப்பட்டோர் பற்றிய பூரணவிபரம் தெரியாததால் இப்பகுதியில் குடியேறியிருக்கும் மக்களின் உறவினர்கள் கவலை கொண்டுள்ளனர்.

## சமாதான சபை சேவைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

தெல்லிப்பளை வடமேற்கு சமாதான நீதிச் சபையின் சேவையை வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பாராட்டினர்.

சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. இராசரத்தினம் பேசுகையில்;

யாழ் மாவட்டத்திலேயே இச்சபை தான் சிறந்த சேவையாற்றுகிறது என்று சொன்னார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் உட்பட பலர் சபையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

கூட்டத்துக்கு தலைவர் திரு. எஸ். நாகேஸ்வரன் தலைமை வகித்தார்.

## கணேச வித்தியாலயம் பரிசு

வட்டுக்கோட்டை, மார்ச், 19

ஆரம்ப பாடசாலையான சித்தன்கேணி கணேசவித்தியாலயம்இவ்வாண்டு முதன்முதலாக உடற்பயிற்சிப் போட்டியில் கலந்துகொண்டு மூன்றுவது பரிசுபெற்றது குறித்து பெரும் பாராட்டுத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை வட்டாரத்திலுள்ள பெரிய பாடசாலைகள் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை வட்டார வருடாந்த உடற் பயிற்சிப் போட்டியிலேயே இப்பாடசாலை 13 வயதிற் குட்பட்ட ஆண்கள் பிரிவில் மூன்றுவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நியாயம் செய்வதற்கு மன ஒருமைப்பாடு வேண்டும். அதற்கு ஒரே வழி பஜனை செய்வது தான்.
-ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
19-03-86
உ. பெ. 23


## காட்டில் வாழும் மிருகத்தின் நிலையா?

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மனித சடலங்கள் தேங்கிக் கிடப்பதால் ஆஸ்பத்திரி நாற்றம் எடுக்கிறது.

இந்தச் செய்தி மிகவும் வேதனைக்கு உரிய ஒன்றாகும். மனிதன் உயிரோடு இருக்கும் போது உள்ள மதிப்பு, மரியாதைகள் எல்லாம் அவன் இறந்தவுடன் அற்றுப் போவது உண்மை தான் ஆனால் அவனது சடலத்துக்கு இறுதி அஞ்சலியும் மரியாதையும் செலுத்தித் தமது மனக்கவலையைப் போக்கும் பண்பாடு உலகளாவியது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதி பெற்று அங்கு இறக்க நேரிடுவோரின் சடலங்களுக்கும், அசம்பாவிதத்தில் இறந்து அங்கு எடுத்துச் செல்லப்படுவோரின் சடலங்களுக்கும் உரிய நேரத்தில் இறுதிக் கிரியைகளைச் செய்து அஞ்சலி செலுத்த முடியாத பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது

பிரேத பரிசோதனை நடத்துவதற்கு தகுதி வாய்ந்த டாக்டர் ஒருவர் தானும் அந்த ஆஸ்பத்திரியில் இல்லை. இந்தக் கஷ்ட நிலைமை கடந்த மூன்று மாதங்களாக அங்கு நிலவுகிறது.

சுமார் 30 மைல் தொலைவில் உள்ள சாவகச்சேரிக்கு வந்து தகுதி வாய்ந்த டாக்டரை அழைத்துச் சென்று தான் பிரேத பரிசோதனை செய்விக்க வேண்டும். அதன் பின்னர் தான் உறவினர் சடலங்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இராணுவத்தினரின் சோதனை, கைது, அது, இது என்று பல கெடுபிடிகளை எதிர் நீச்சலடித்துக் கொண்டே கிளிநொச்சியிலிருந்து சாவகச்சேரி வரவேண்டும்.

கிளிநொச்சி ஒரு பெரிய மாவட்டம். அங்குள்ள பிரதம ஆஸ்பத்திரி என்று சொல்வதற்கு ஒன்றுதான் உண்டு. அதிலும் இத்தனை வசதியீனங்கள் என்றால் அப்படி ஒரு ஆஸ்பத்திரி இருந்தென்ன? இல்லாமல் என்ன?

இந்த ஆஸ்பத்திரியில்தான் முன்னர் ஒரு தடவை மனித சடலங்களை நாய்கள் இழுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றது. அப்போதே பிரஸ்தாப ஆஸ்பத்திரியில் நிலவும் வசதிக் குறைபாடுகளை நீக்க வேண்டியதன் அவசியத்தை இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

அது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆயிற்றே? இப்போது மேலும் பல வசதிக் குறைவுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்பத்திரியில் கட்டட, உபகரண வசதியில்லை என்றால் பொது மக்கள் சேர்ந்தாவது அவற்றைப் பெற்றுக் கொடுக்கலாம். வைத்தியர்களை பொதுமக்கள் நியமிக்க முடியாது. தொண்டு அடிப்படையில் தானும் தனியார் வைத்தியர்கள் பிரேத பரிசோதனை நடத்திச் சடலங்களை ஒப்படைக்க இயலாது. இது சட்டத்துக்கு அமைவாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று.

வயலில் வேலை செய்பவர்களையும், வீதியால் செல்வோரையும், வீட்டில் இருப்பவர்களையும் சுட்டுக் கொன்று விட்டு, பயங்கரவாதிகள் எனக்கூறும் அரசாங்கத்துக்கு தமிழர் சடலங்களைப் பற்றி அக்கறை எப்படி வரும்?

டாக்டர்களை நியமித்து நிலைமையைச் சீராக்கவில்லை என்றால், மக்கள் சட்டத்தை மீறித் தமது உறவினர்களின் சடலங்களைப் பரிசோதனை, விசாரணை எதுவுமின்றி எடுத்துச் செல்லும் ஒரு கட்டம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அவ்வாறு ஒரு நிலைமை உருவாகுமுன் மாவட்ட மட்டத்தில் உள்ள அதிகாரிகளாவது நிலைமையைச் சீராக்க முயலக் கூடாதா? தமது அதிகாரத்துக்கு உட்பட்டு மாற்றுவழி எதையும் மேற்கொள்ள முடியாதா?

வீட்டில் நாய் செத்தாலும், அதனை உரிய முறைப்படி அடக்கம் செய்கிறோம். ஆனால் தமிழன் நிலை, காட்டில் வாழும் மிருகங்கள் போல் ஆகிவிட்டது. இதற்கு முடிவு வருவது எப்போது?

## ஆயுத பலத்தால் ஓர் இனத்தை வென்றதாக சரித்திரமில்லை

### சர்வோதயத் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச். 19

ஆயுதபலத்தால் ஓர் இனத்தை இன்னோர் இனம் வென்றதாகச் சரித்திரமே கிடையாது.

இப்படி சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன சொன்னார்.

தேசிய ஒற்றுமை சம்மேளனம் நடத்திய கருத்தரங்கு ஒன்று அண்மையில் ஹொட்டலில் நடைபெற்றது.

இவர் மேலும் பேசுகையில் மலையகச் சம்பவங்கள் கவலை தருகின்றன. இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது என்றார்.

பிரதி பொலீஸ்மா அதிபர் திரு. காமினி குணவர்த்தன பேசுகையில் ராணுவ, பொலீஸ் முகாம்களினால் நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியாது. அப்படி ஏற்படுத்தப்படும் அமைதி போலியாகத்தான் இருக்கும் என்றார்.

### கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 19

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலவரையின்றி பின் போடப்பட்டுள்ளது.

இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் இக் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது.

# நல்லைநகர் நமக்கு அளித்த நல்லைக் குருமணி

### இளஞ் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

இன்று 'அன்னாரின் 5ஆவது ஆண்டு நினைவு தினம் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் கொண்டாடப்படுகிறது அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

உலகம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே சிவவழிபாடும் தோன்றியது எனலாம். அத்தகைய பெருமை வாய்ந்த சைவம் தமிழ் மண்ணில் வேரூன்றி நிலைத்து நின்று மணம் வீசி நிற்பதற்கு ஆன்றோரே காரண கர்த்தா.

மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கச் செய்வதற்கு அவ்வப்போது பெரியார்கள் தோன்றியுள்ளனர்.

தொல்லை வினை தீர்க்கும் நல்லை நகரிலே ஆதீனம் ஒன்றை அமைத்து தமிழும் சைவமும் மேலோங்கி வளர அல்லும் பகலும் அயராது பாடுபட்ட ஒரு பெருந்தகைதான் நல்லைக் குருமணி அவர்கள்.

ஈழநாட்டில், 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அடிப்படையிலே இன்சுவைத் தீந்தமிழிலே சமயக் கதைகளையும் கருத்துக்களையும் பாமரரும் பண்டிதரும் புரியும் வகையில் எடுத்துச் சொன்ன மேதாவி நல்லை ஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்தான் எனக்கூறின் அது மிகையாகாது.

சாந்தம் தவழும் திருமுகம்; புன்னகை தரும் வதனம் காந்தஒளிவீசும் கண்கள். நெற்றியிலே திரிபுண்டரம் மார்பிலே ருத்திராக்ஷம் அரையிலே காவி வஸ்திரம். காதிலே குண்டலம்; தலையிலே அழகிய அக்குமாலை. பார்த்தாலே கையெடுத்து வணங்கக் கூடிய தோற்றம்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய ஸ்வாமிகளுக்குக் கதாப்பிரசங்கம் ஒரு கைவந்த கலை கணீரென்ற குரல் இயலோடு இசையும் சேர்ந்து விட்டது கேட்கவா வேண்டும். சைவ ஆலயங்கள் தோறும் தமிழ் மணம் வீச ஆரம்பித்தது. ஸ்வாமிகள் கதை செய்கிறார் என்றால் அங்கே ஜனத்திரள் நிரம்பி வழியும்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை ஸ்வாமிக்கேயுரிய ஒரு தனித்துவமாகும். திருவிளையாடற்புராணம், திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலானவை ஸ்வாமிகள் வாயிலாகக் கேட்கும்போது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். தனக்கே உரித்தான பாணியில் விளக்கம் சொல்லி மக்களை வியப்பில் ஆழ்த்தி விடுவார்.

'நிறைகுடம் தளம்பாது' என்பதற்கிணங்க அவரிடம் பெருமை தளிதானும் இருக்கவில்லை. புகழ்மாலைகளைப் பணிவோடு ஏற்றுக் கொள்வார். யாரையுமே எளிதில் வசீகரித்து விடுவார். அவதூறு பேசுபவர்கள் கூட அவரைக் கண்டவுடன் கரங்கூப்பி வணங்கி விடுவர். நியம நிஷ்டை தவறாத புண்ணிய சீலராக வாழ்ந்து காட்டியவர் நல்லை ஸ்வாமி அவர்கள். தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவ வகை செய்தவர் இவர்.

இனிமையுடன் கலந்த இன்பநாதம் ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் கூடக் கேட்டது. மதுரை, சிதம்பரம் போன்ற புண்ணிய க்ஷேத்திரத்திலே ஸ்வாமிகள் கதை செய்து மக்களை நல்வழிப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் சென்று தமிழ் மணம் பரப்பினார்.

சைவமும் தமிழும் இப்போதும் இங்கு நிலை பெற்று இருப்பதற்கு ஸ்வாமிகளும் ஒருவகையில் துணை நின்றார் எனின் சாலப்பொருந்தும். தனது உடல், பொருள், ஆவி அத்தனையும் சமயத் தொண்டுக்கே அர்ப்பணித்து இறுதிவரை நின்று சேவையாற்றிய பெருமை அவருக்கே உரியதாகும்.

நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தப் பெருமான் எவ்வாறு சைவத்தமிழ் வளரப் பாடுபட்டாரோ அவ்வாறே ஸ்வாமிகளும் சொற்றமிழ் மூலம் உழைத்தார்.

பால்குவாயர் பதினாறு ஆண்டுச்காலம் பூவுலகில் வாழ்ந்தார். அதேபோல ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளும் காஷாயம் பெற்றுத் துறவியாக வாழ்ந்த காலமும் பதினாறு வருஷமாகும்.

1965ம் ஆண்டு மதுரை ஆதீனத்தில் ஆடிக் கிருத்திகையில் காஷாயம் பெற்றார் வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க நல்லை நகரிலே ஒரு ஆதீனம் அமைக்க வேண்டும் என்று அவர் அயராது உழைத்தார்.

ஆறுமுகன் அருளால் அவர் ஆசை ஆதீனமாய் உருவெடுத்தது. திருமுறைப்பண்ணிசை, சமய பாடவகுப்புக்கள், சித்தாந்த, பாலபண்டித வகுப்புக்களை, இன்னும் பல்வேறு சமயசம்பந்தமான விழாக்கள் அத்தனையும் ஆதீனத்தை நிறைந்தன. குருபூசை, வெள்ளி தோறும் மஹேஸ்வர பூஜை செய்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. தொண்டையாலேயே தொண்டு செய்த மகான் இவர்

பூர்வாச்சிரமத்தில் ஒரு நிகழ்ச்சி ஒருமுறை மகாத்மா காந்திஜி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

அப்போது அவரது உருவப்படத்தை அப்படியே வரைந்து அவருக்கே கொடுத்தாராம். அது கண்ட காந்திஜி பிரமித்துப் போனார். அவரை வெகுவாய்ப் பாராட்டி கையொப்பமும் இட்டுக் கொடுத்தாராம். சித்திரம் தீட்டுவதிலும் விற்பன்னராக இருந்திருக்கின்றார் ஸ்வாமிகள்.

சொல்நயமும் கருத்தாழமும் மிக்க கதை செய்து வந்த ஸ்வாமிகள் எழுத்தாளராகவும் திகழ்ந்தார். 'அருளமுதம்' என்ற பெயரில் சமய சஞ்சீவியையும் அவர் எழுதி வெளியிட்டார்.

மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக சமய அறிவுப்போட்டி, பண்ணிசைப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகளையும் நடத்தினார். மாணவ சமுதாயம் நல்லை ஆதீனத்தால் நற்பயனடைந்தது

நல்லூரிலே திருப்புகழ் மண்டபம் ஒன்றை அமைத்து கார்த்திகை தோறும் கதாப்பிரசங்கம் செய்த பெருமை இவரையே சாரும்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று அடிக்கடி கூறிக் கொள்வார். கூட்டுப் பிரார்த்தனை மூலம் இறைவனைக் காணலாம் என்பது ஸ்வாமிகள் கருத்து. ஒவ்வொரு கதையின் இறுதியிலும் பஜனை செய்து மக்களை ஆத்மீகத் துறையில் ஈடுபடுத்தினார். தத்துவக் கருத்துக்களை எளிமையான விளக்கங்களோடு கூறி விளங்கப் படுத்துவார். அதற்கு நிகர் அவரே.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் சேவை நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் அவருடைய சமாதி பெற்ற தினத்தை நினைவு கூரும் இந்த வேளையில் அவர் விட்டுச்சென்ற பணியை நம்மாலியன்றளவு தொடருவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

நாவலர் அவர்கள் எவ்வாறு நற்பணி புரிந்தாரோ, அதுபோலவே நமது ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளும் நல்லை ஆதீனத்தை மையமாகக் கொண்டு தமிழ்ப்பணி புரிந்தார். இளவயதிலே ஆரம்பித்த இவரது கதாப்பிரசங்க சேவை அவரின் இறுதி மூச்சு இருக்கும் வரை தொடர்ந்தது. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலும் இவர் தொடர் பிரசங்கம் செய்திருக்கின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும் என்று வலியுறுத்தி வந்த ஸ்வாமிகள் தமது 63 ஆம் வயதில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றுக் கொண்டார். அவரது சமாதி ஆதீனத்திலேயே அமைந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

இன்றும் அவருக்கு அங்கே நித்திய பூஜைகள் நியமந் தவறாது நிகழப் பெற்று வருகிறது. நானிலம் போற்ற வாழ்ந்து நல்லூரிற் சேவை செய்த நமது ஸ்வாமிகள் இன்றும் நம் மனக்கண் முன் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார். அவரின் கணீரென்ற குரல் நம் காதுகளில் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது. "சேரவாரும் ஜெகத்தீரே, என அழைப்பது இப்பொழுதும் நமக்குக் கேட்கிறது.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என வாழ்ந்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன். அவர் செய்த நற்பணியைநாமும் தொடர்ந்து செய்து மக்களை நல்வழிப்படுத்து வதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

இவர் ரௌத்திரி வருஷம் பங்குனி மாதம் 28ம் நாள் வெள்ளிக்கிழமை (11.4.1981) இரவு பரிபூரணத்துவமடைந்தார். ஞானசம்பந்தரும், செல்லப்பா சுவாமிகளும் யோகர் சுவாமிகளும் பங்குனித் திருவாதிரையிலேதான் இயற்கையெய்தினார்கள். நமது நல்லைக் குருமணியும் பங்குனித் திருவாதிரை நட்சத்திரத்திலே தான் சமாதி நிலையை அடைந்தார் என்றால் அவர் பெருமை சொல்லுந் தரமன்று



பரமாசார்ய சுவாமிகள்

## அமிர்தலிங்கம் கல்லூரிக்கு மேலும் சிறப்பு

### விக்டோரியா கல்லூரி வைபவத்தில் உரை

வட்டுக்கோட்டை. மார்ச். 19

இக் கல்லூரியின் பழைய மாணவரான திரு. அ. அமிர்தலிங்கம் தமிழ் இனத்தின் தலைவராக இருப்பது கல்லூரியின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்,

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் 23 ஆவது வருடாந்த மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு கா. சந்திரராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது மாணவர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும் கட்டுப்பாடு நிறைந்தவர்களாகவும் வாழ வழி காட்டுவதற்காகவே கல்லூரிகள் தோறும் உயர்தர மாணவர் ஒன்றியம் அமைக்கப்படுகின்றன.

இக் கல்லூரியின் ஒன்றியத்திலுள்ள மாணவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான நற் பண்புகளைக் கற்று எதிர்கால நற்பிரஜைகளாக வாழ்வார்களென நம்புகின்றேன் என்றார்.

உயர்தர மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் பா. தனபாலன் தலைமையில் வைபவம் நடைபெற்றது

வட்டுக்கோட்டை கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு நா. வேலுப்பிள்ளை விசேஷ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கல்லூரி அதிபரும் வட மாகாண அதிபர் சங்கத் தலைவருமான திரு. க. அருணாசலம், சுழிபுரம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. வி. கிருஷ்ணசாமி செல்வி. எஸ். ஆனந்தி, செல்வி எம் பத்மிமாராணி, செல்வன். எல், அசோக்குமார் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

பண்டாரி சொல்கிறார்

## இயலாத் தன்மையே இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணம்

புதுடில்லி, மார்ச். 18

தமிழரின் அபிலாஷைகளை உணராத பெரும்பான்மை இனத்தவரின் இயலாத் தன்மையே இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைக் காரணம்.

இப்படி இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி செப்பினார்.

அமெரிக்க - இந்திய பொருளாதாரக் கூட்டுக் கமிஷனின் 10 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் திரு. பண்டாரி பேசினார்.

இலங்கையில் நிலவும் நம்பிக்கையற்ற நிலையில் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணும் சாத்தியக் கூறுகள் இல்லை.

தமிழரின் நியாயமான [illegible] இலங்கையில் [illegible] திட்டன.

இலங்கையில் தமிழர் தாக்குதலுக்கு ஆளாவது; கொல்லப்படுவது தமிழ் நாட்டில் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இலங்கைத் தமிழர், தமிழ்நாட்டு மக்களின் உடன் பிறப்புக்கள் என்பதை மறந்து விடக் கூடாது — இப்படி திரு. பண்டாரி சொன்னார்.

## சைவசமயபாட பரீட்சை முடிவு

புங்குடுதீவு, மார்ச் 19

யாழ் சைவபரிபாலன சபையினர் கடந்த ஆண்டு நவம்பரில் நடத்திய அகில இலங்கை சைவ சமயபாடப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மூன்றும் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையு[illegible] மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.



### பொய்யாமொழி

குறள்:

நினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரிவார்.

பொருள்:

ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

## அபிவிருத்திவேலைகளில் பிரஜைகள் குழுக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பிரஜைகள் குழுக்கள் தத்தமது பகுதிகளில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளில் தமது பங்களிப்பைச் செலுத்தவேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப் படுகின்றனவா? மாற்றம் அல்லது சீர்திருத்தம் தேவையா? என்பன பற்றிப் பிரஜைகள்குழுக்கள் ஆலோசித்து உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது.

நல்லூர் இந்து விடுதியில் யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்ட விரோத மின்சார பாவனையால் இன்று பலபகுதிகளின் அபிவிருத்திபாதிப்பு அடைகிறது. இது போன்ற பிரச்சினைகளைப் பிரஜைகள் குழு ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம் தனது பேச்சில், பிரஜைகள் குழுக்கள் தத்தமது பகுதிகளில்நிகழும் வன்செயல்கள், அவற்றில் மரணமடைந்தோர், காயமடைந்தோர், உடைமைகளை இழந்தோர் ஆகியோரின் விவரங்களை உடனுக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு அறியத் தரவேண்டும்.

அப்படியானால் அவர்களுக்கு உரிய உதவிகளையும் நிவாரணங்களையும் காலதாமதமின்றி வழங்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

யாழ் பிரஜைகள்குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் தமது உரையில் இன்று பிரஜைகள் குழுக்கள் தமிழ் மக்கள் மத்தியிலும், அரசாங்க மட்டத்திலும், உலக அரங்கிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

இங்கு நடைபெற்ற வன்செயல்கள் பற்றிச் சரியான விவரங்கள், தரவுகளைச் சூட்டோடு சூடாக உரியவர்களுக்குச் சரியான சந்தர்ப்பங்களில் வழங்கியதால்தான் இந்த நிலைமை உருவாகியது என்றார்.

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவை பதவிகள்கொண்ட, நிதியம் உள்ள, யாப்பு ரீதியான, நெகிழ்ச்சியற்ற ஒரு ஸ்தாபனமாக அமைப்பதில்லை என்று இக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

வெகுஜன அமைப்புகளுடன் நிறுவன ரீதியாக இணைய முடியாவிடினும், அத்தியாவசிய வேளைகளிலே அவர்களோடு பிரஜைகள் குழுக்களும், பிரஜை குழுக்களுடன் அவர்களும் ஒன்றிணைந்து இயங்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருமதி எஸ். அருணாசலம், வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுப்பிரதிநிதி ஏ.குமாரசாமி, காங்கேசன்துறைப் பிரஜைகள் குழுப் பிரதிநிதி திரு. ஏ. குமரகுரு, இணுவில் பிரஜைகள் குழுப் பிரதிநிதி திரு. எஸ் சண்முகரத்தினம், வட்டுக்கோட்டைப் பிரஜைகள்குழுப் பிரதிநிதி திரு எஸ். குலசூரியர், திரு. எஸ். சிவானந்தராசா, சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. த மாணிக்கவாசகர் ஆகியோரும்கூட்டத்தில்பேசினார்கள்.

## பிக்குவை கடத்த முயற்சி

கொழும்பு, மார்ச். 19

வாழைச்சேனையில் பிக்கு ஒருவரைக் கடத்த இனந்தெரியாத நபர்கள் முயற்சித்தனராம்

விகாரையில் இருந்து தப்பி ஓடிய அந்தப் பிக்கு வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Science Academy**
செட்டித்தெரு லேன் -- நல்லூர்.
87 A/L தாவரவியல்
திரு. பாலா
அலகு 06 அஞ்ஜியோஸ் மின் பாகுபாடு
(நடைபெறுகிறது)
நேரம்: சனி-ஞாயிறு காலை 7-00—8-00

# உதயன்

19. 03. 1986 புதன்கிழமை

**Science Academy**
Clock-Tower Road - JAFFNA.
86 A/L தாவரவியல்
திரு. பாலா
86 A/L சூழலியல் (Ecology)
ஆரம்பம்: 23 - 03 - 1986
ஞாயிறு காலை 8 30

# போராளிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும்

## கூட்டணி வடக்கு - கிழக்கு இணைப்பை கைவிட வேண்டும்

### பண்டாரியிடம் திலகரத்தின

புதுடில்லி, மார்ச் 18
● தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும்.
● வடக்கு — கிழக்கு இணைப்பை மிதவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட வேண்டும்

இந்த இரண்டையும் இந்திய அரசு நிறைவேற்றுமானால், மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை அரசு தயாராக உள்ளது.

மேற்கண்ட கருத்துக்களையே இலங்கைத் தூதர் பெர்னுட் திலகரத்தின. வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்த போது வலியுறுத்தினர் என்று தெரிய வருகிறது

இலங்கை-இந்திய ராஜதந்திர நெருக்கடியைத் தொடர்ந்து கொழும்பு வந்த இலங்கைத் தூதர் பெர்னுட் திலகரத்தின மீண்டும் டில்லி சென்றார் என்பது தெரிந்ததே.

திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்த திரு திலகரத்தின. இலங்கையின் நிலைமைபற்றி எடுத்துச் சொன்னார்

இவ்வாரம் பிரதமர் ராஜீவ் காந்தியை அவர் சந்திக்க இருக்கிறார்.

பேச்சுக்கள் என்ற போர்வையில் இராணுவத் தீர்வுக்கு இலங்கை அரசு முயல்கிறது என்ற அபிப்பிராயத்தை மாற்றும் நோக்கில் இலங்கைத் தூதரின் பேச்சு அமைந்து இருந்தது என்றும் கூறப்படுகிறது.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுக்கும் பொறுப்பு இந்தியாவிடமே உள்ளது என்றும் திரு திலகரத்தின திரு பண்டாரியிடம் சொன்னார் என்று அறிய வருகிறது.

## உற்சவ காலத்தில் ஆலய மின்சார விநியோகம் துண்டிப்பு

சங்கரத்தை, மார்ச் 19
வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மின்சார விநியோகம் திடீர் எனத் துண்டிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆலயத்தில் இப்போது வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இரண்டாவது திருவிழா நாளான கடந்த திங்கட்கிழமை மின்சார விநியோகம் திடீரெனத் துண்டிக்கப்பட்டது.

மின்சாரக் கட்டண நிலுவை நீண்ட காலமாகச் செலுத்தப்படாததாலேயே மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆலய மின்சாரக் கட்டண நிலுவையை நிர்வாகத்தினர் செலுத்தாமை குறித்தும், உற்சவ காலத்தில் திடீரென மின்சார விநியோகத்தை அபிவிருத்தி சபை உப அலுவலகம் நிறுத்தியமை குறித்தும் வழிபடுவோர் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

### கோப்பாயில் சங்காபிஷேகம் மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
கோப்பாய் பலானை அருள்மிகு கண்ணகை அம்மன் கோயில் சங்காபிஷேகமும் மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் இன்று (புதன்) நடைபெறுகின்றன.

மலர் வெளியீட்டு விழாவிற்கு பரிபாலன சபைத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமை வகிப்பார்

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்

பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் விமர்சன உரை நிகழ்த்துவார்.

வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் சிறப்புரை நிகழ்த்துவார்

### நயினை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாதி' பாடல் பாராயணம் செய்வதை ஆரம்பித்து வைத்தார்.

ஆலய ஓதுவாரும் அறங்காவலருமான திரு. வே. பொன்னம்பலத்தினால் அபிராமி அந்தாதி முற்றாக ஓதப்பட்டது.

அபிராமி அந்தாதி பாராயணம் தொடர்ந்து 108 நாட்களுக்கு நடைபெறும்

இதன்மூலம் நாட்டில் அமைதியும், சாந்தியும் ஏற்படுமென ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சா. பரமேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்

இந்த ஆலயத்தின் காசாளராக இருந்து அகால மரணமான செல்வன் நா. புஸ்பாகரனின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென அறங்காவலர் சபையினர் பிரார்த்தனை செய்தனர்.

இவரின் நற்சேவையைப் பாராட்டி அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்தது டன் குடும்பத்திற்கு 5000 ரூபா வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பாண்டிருப்பில் வயோதிப தம்பதியர் கைது

மட்டக்களப்பு மார்ச். 19
கடந்த புதன்கிழமை பாண்டிருப்புக் கிராமத்தில் வயோதிபத் தம்பதிகள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் ஒரு மகன் முன்னர் ஒருதரம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

அதன் பின்னர் சில நிபந்தனைகளுடன் அவர் விடுவிக்கப்பட்டார்

வாரம் ஒருதடவை ஆயுதப் படைமுகாமுக்குச் சென்று கையொப்பம் இடவேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

இந்த நிபந்தனைப்படி அவர் செல்லத் தவறவே, படையினர் வீட்டுக்குச் சென்றனர்.

அங்கு அவர் இல்லாது இருக்கவே தாய், தந்தையரைக் கைதுசெய்தனர்.

பழுகாமம் என்ற இடத்தில் தமிழ் இளம் தம்பதியினரும் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷப்று டமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 19 03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/N/86

### கோழிகளை திருப்பி ஒப்படைக்க வேண்டுகோள்

பலாலி, மார்ச் 19
சமீபத்தில் அச்சுவேலியில் களவு போன கோழிகள், கோழி உணவு, கூடமைக்கும் பலகைகள் ஆகியவற்றை திரும்பவும் ஒப்படைக்குக.

மேற்கண்டவாறு அதன் பொறுப்பாளர் டாக்டர் (திருமதி) தங்கராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு தொண்டமானின் அமைச்சின் கீழ் இயங்கும் இப்பண்ணை வட பகுதியில் கோழிக்குஞ்சு உற்பத்தி செய்யும் ஒரே அரச நிறுவனம் ஆகும்.

## சிங்களவர் மூத்த சகோதரர் இஸ்லாமியர் இளைய சகோதரர் என்கிறார் பாக்கீர்

கொழும்பு, மார்ச் 19
சிங்களவர் மூத்த சகோதரர். இஸ்லாமியர் இளைய சகோதரர். மூத்த சகோதரரின் கஷ்டத்தை உணர்ந்து இளைய சகோதரன் உதவ வேண்டும்.

இப்படி திணைக்களம் இல்லாத அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மார்க்கார் சொன்னார்.

தம்புள்ள முஸ்லிம் வாலிப முன்னணிக் கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில் மேலும் சொன்னதாவது;

முஸ்லிம்கள் நாடு பிரிவதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். நாட்டின் ஐக்கியத்துக்காக முஸ்லிம்கள் உழைப்பவர்கள். நாட்டுப்பற்று முஸ்லிம்களுடன் கூடிப்பிறந்த பண்பு இவ்வாறு அமைச்சர் சொன்னார்

### கைதானார்

கொழும்பு, மார்ச் 19
தன்னியக்க ரைபிள் ஒன்றை வைத்து இருந்த சிங்களவர் ஒருவர் மொரட்டுவை பொலீஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

யாழ் நகரில் கடத்தப்பட்ட

## ஓய்வு பெற்ற சிங்கள ஆசிரியர் நேற்று விடுதலை

சுண்டுக்குளி, மார்ச் 19
ஒரு மாதத்துக்கு முன்னர் யாழ் பஸ் நிலையத்தில் வைத்து இளைஞர்களால் பிடிக்கப்பட்ட ஓய்வுபெற்ற சிங்கள ஆசிரியர் ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

குருநாகலில் உள்ள கொக்கரல்ல என்னும் இடத்தில் வசிக்கும் இரத்னபக்கா முதியான்சலாகே என்பவரே இந்த நபர் ஆவார்.

50 வயதையுடைய இவர் ஆசிரியராக இருந்து சுகயீனம் காரணமாக ஓய்வு பெற்றவர் என்று சொல்லப்படுகிறது

கடந்த மாதம் 12ஆம் திகதி குருநாகலில் இருந்து இவர் கொழும்பு புறப்பட்டார்

பின்னர் அடுத்த நாள் அங்கிருந்து மீண்டும் குருநாகலுக்கு வந்து அங்கிருந்து அனுராதபுரம், வவுனியா வழியாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

யாழ் பஸ் நிலையத்துக்கு அருகில் நின்று சிங்கள மொழியில் பேசியபோது இவரை சந்தேகித்த தீவிரவாத இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

பின்னர் நேற்று யாழ் அரசாங்க செயலகத்தில் வைத்து காலை 10 மணி அளவில் விடுவிக்கப்பட்டார்.

இவர் நேற்று பிற்பகல் 2 மணி அளவில் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த குலசேகரத்தினால் யாழ் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

### நெல்லியடி உடுப்பிட்டியில் வீதி தடை நீக்கம்

உடுப்பிட்டி, மார்ச் 19
நெல்லியடிச் சந்தியிலும், உடுப்பிட்டி வீதியிலும் கடந்த 17ஆம் திகதி போடப்பட்டிருந்த வீதித் தடைகள் நீக்கப்பட்டு விட்டன.

அன்னையர்கள் மேற்கொண்டிருந்த இந்த வழி மறிப்புப் போராட்டம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலையுடன் நிறுத்தப்பட்டது.

### பூஸா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார், உறவு முறையின் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும் சத்தியக் கடதாசியையும், அவர் வதியும் பிரிவு உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக் கடிதத்தையும், சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் கடிதம் பெற்றவர்கள் மட்டுமே இந்த மூன்று சிறைச்சாலைகளுக்கும் சென்று உறவினர்களைப் பார்க்கக் கூடியதாக இருந்தது

### பாக்-இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் ஆகும். இதனால் இந்தியாவின் சமூக, பொருளாதாரச் சுமைகள் அதிகரித்துள்ளன பல பிரச்சினைகளுக்கும் இந்தியா முகம் கொடுக்க வேண்டி இருக்கிறது. இலங்கை இதனை உணர்வதாக இல்லை. இதுவும் மிகக் கவலை தரும் விஷயமாகும்

— இவ்வாறு இலங்கை குறித்து அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பிரஸ்தாப அறிக்கையில் பாகிஸ்தான் குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:-

பாகிஸ்தானின் பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாகவும், இந்தியாவில் வாழும் சிறுபான்மை மக்களின் நிலை குறித்தும் பொறுப்பற்ற விதத்தில் தகவல் வெளியிட்டுள்ளார். இதுமிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி வருவது குறித்தும் இந்தியா கவலை அடைகிறது.

பிரதமர் ராஜீவும் அதிபர் ஷியாவும் பல தடவைகள் சந்தித்துப் பேசியும் இரு நாட்டு உறவிலும் ஏற்பட்ட விரிசல் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாகக் கூறுவதற்கில்லை

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கருணாநிதி மிரட்டல்

திருச்சி, மார்ச் 18
திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களைச் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும்.

அப்படி அனுமதிக்கப்படாவிட்டால், பெரிய சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படும்

இப்படி தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எச்சரித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அண்ணா தி. மு. க. ஆட்சிக்கு எதிரானவை என்றும் கலைஞர் கருணாநிதி சொன்னார்.

### காஸ் சிலிண்டர் வெடித்து இருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 19
கொழும்பு முகத்துவாரத்தில் நேற்று காஸ் சிலிண்டர் ஒன்று வெடித்ததில் 2 பேர் மரணம் அடைந்தனர். 3 பேர் காயமடைந்தனர்.

பிராணவாயு நிரப்பப்பட்ட சமயமே சிலிண்டர் வெடித்தது.

இந்த காஸ் சிலிண்டர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவரப்பட்டது என்று பொலீஸார் கூறினர்.

தீவிரவாத இயக்கங்களுக்கும் இச்சம்பவத்துக்கும் தொடர்பு உண்டு என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# விளையாட்டரங்கு

தலைவர் வெற்றிக் கிண்ணம்

## இறுதிப் போட்டி இன்று

### பாடும் மீன், பொற்பதி அணிகள் மோதல்

—விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன்—

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் "தலைவர்" வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறும்.

இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

9 பேர் பங்கு கொள்ளும் "நொக் அவுட்" முறையிலான இந்த உதைபந்தாட்டப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

ஏ பி என இரு பிரிவுகளாக நடைபெற்று வந்த இந்த 'கொக்கவுட்' முறை உதைபந்தாட்டத்தில் 10 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின

இன்றைய இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாக திரு. வி கே ஆறுமுகம் கலந்து கொள்வார்.

இந்தப் போட்டிக்கான ஒழுங்குகளை போட்டிக் குழுச் செயலாளர் திரு. எம். தேவதாஸ் செய்துள்ளார்.

### பொற்பதி சாம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 19
உரும்பராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய 15 ஆவது வருடாந்த 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனானது

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழக அணியை பொற்பதி ஐக்கிய அணி 3 க்கு 2 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

உரும்பராய் திருக்குமரன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்தது.

ஆட்ட முடிவில் வெற்றி பெற்ற அணிக்கான பரிசில் வழங்கும் வைபவம் திருக்குமரன் சன சமூக நிலைய உபதலைவர் திரு சி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது

வெற்றி பெற்ற பொற்பதி ஐக்கிய அணிக்கு முதற் பரிசாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த இறுதிப்போட்டிக்கு என். மகேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### மயிலணி வளர்பிறை வெற்றியீட்டியது

சுன்னாகம், மார்ச் 19
இணுவில் கலைஒளி விளையாட்டுச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் 7 வீரர்கள் பங்குபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்துக்கும் வளர்பிறை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான இப்போட்டி இணுவில் கலை ஒளி மைதானத்தில் நடைபெற்றது

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வளர்பிறை கழகத்தினர் 9க்கு 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

வளர்பிறை கழக முன்னணி வீரர்கள் சின்னராசாவும் உதயகுமாரும் சிறப்பாக ஆடினர்.

வளர்பிறை கழக கோல் காப்பாளர் ராஜ்குமார் குப்பிளான் வீரர்களின் மின்னலடிகளைச்சிறப்பாக தடுத்தபோதெல்லாம் ரசிகர்களின் ஆரவாரம் அடங்க சில நிமிடங்கள் எழுந்தன

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. எஸ் தேவன் கடமையாற்றினார். அரை இறுதிப் போட்டி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும்.

உரும்பராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும்மீன் விளையாட்டு "பி" கழகமும் மோதும்.

அன்று மாலை 4.50க்கு சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும்மீன் "ஏ" பிரிவு கழகமும் மோதும்.

## உடற் பயிற்சி போட்டி முடிவுகள்

வட்டுக்கோட்ட, மார்ச் 19
வட்டுக்கோட்டை கல்வி வட்டார வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

சுமார் 24 பாடசாலைகள் இவ்வுடற்பயிற்சிப் போட்டியில் கலந்து கொண்டன.

வட்டாரக் கல்வி அதிகாரி (உடற்பயிற்சி) திரு. வி. கணேசலிங்கம் பரிசு பெற்றோருக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்

போட்டியில் பரிசு பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு

★ 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு;-
1. சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை
2. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,
3. சித்தன்கேணி கணேச வித்தியாலயம்,

★ 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு:-
1. சில்லாலை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை,
2. பண்டத்தரிப்புஜசிந்தா றோ. க. த.க. பாடசாலை
3. சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,

★ 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:-
1 அராலி இந்துக்கல்லூரி
2. அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்,
3. பண்டத்தரிப்புஜசிந்தா றோ. க. த. க. பாடசாலை

★ 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு:-
1. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,
2. அராலி இந்துக்கல்லூரி
3. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,

### "இறந்தவர்" திரும்பிவந்தார்!

யாழ்ப்பாணம், மார்ச் 19
இறந்து விட்டார் என்று எண்ணப்பட்டவர் வீடு வந்து சேர்ந்தார்.

1984இல் வவுனியாப் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின் போது வவுனியா, சேமமடுப் பகுதிகளில் பலர் கைதாகினர்; காணாமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

அப்படி எண்ணப்பட்டவர்களில் ஒருவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் முன்னிலையில் கொண்டு வந்து விடப்பட்டார்.

சித்தசுவாதீனமுற்ற நிலையில் அந்த நபர் காணப்பட்டார்.

### ரயில் சேவை மீண்டும் ஆரம்பமாகும்

நல்லூர், மார்ச் 19
வியாழன் அல்லது வெள்ளிக்கிழமையில் மீண்டும் கொழும்பு-யாழ் ரயில் சேவை ஆரம்பமாகலாம் என்று ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பரந்தனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன.

## வவுனியாவில் 2 இளைஞர் காயம்

நல்லூர், மார்ச் 19
லொறியில் வந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இரு இளைஞர்கள் காயம் அடைந்தனர்.

வவுனியா பனிக்க நீராவியடியில் இந்தச் சம்பவம் நடந்தது.

காயம் அடைந்தவர்களில் ஒருவர் முருகேச ராஜா, வயது 23. யாழ் ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு கையில் காயம் ஏற்பட்டது.

தம்முடன் நின்ற மற்றும் ஓர் இளைஞருக்கும் காயம் ஏற்பட்டதாக இவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org